காவியம்

ஆசிரியர்: சுரதா

(கவிதை வார இதழ்)

சுவடி 1 : ஏடு 8 | சென்னை : திருவள்ளுவராண்டு, 1986, கார்த்திகை 2 18—11—55 | விலை அணா 1

புலி நகத்தால் கொன்ற 'மலை எலி'

"அப்சல் கானை அழைத்து, அவனிடம்,
மராட்டிய வாலிபன், மலையெலி, சிவாஜியின்
ரத்தத் தைநம் கத்தியில் நனைத்து
வருக உடனே ! 'மாண்டான்' என்னும்
ஒப்பாரிச் செய்தியை உலவ விடுக !"
என்று ஆணை இட்டான், டில்லியை
ஆண்ட அரசன் அவுரங்க சீப்பு !
அந்தத் தளபதி, ஆத்திரத் தோடு,
பன்னிரண் டாயிரம் படைவீ ரருடன்
மார்தட்டி எழுந்தான் மராட்டியம் நோக்கி.
சிவாஜி, டில்லி சேனையைக் கண்டு,
அதிர்ச்சி அடைந்தான், ஆயினும் உடனே,
எதிர்த்து வெல்லுதல் இயலா தொன்று,
நெஞ்சிலே கொலைசெயும் நினைவு நிறுத்தி
வஞ்சக ஓலை வரைந்தன் சிவாஜி;
அப்சல் கானெனும் அத்தள பதிக்கு.
அடியில் இருப்பது அந்தக் கடிதமே !

அவுரங்க சீப்மன்னன் அனுப்பி வைத்த
ஆண்சிங்கத் தளபதியே ! ஓர்விண் ணப்பம் :
எவருண்டு எனைவெல்ல, என்று, நேற்று
இருள்முடிவு பெறும்வரைநான் நினைத்தி ருந்தேன்

சுவர் தன்னை இடிப்பதற்கா கருவி இல்லை?
சுண்ணும்பைக் கரைப்பதற்கா, தண்ணீர் இல்லை?
தவருன தீர்மானம் கொண்டு விட்டேன்,
தக்கவய தில்லாத கார ணத்தால் !

புவிமெச்சும் பீஜப்பூர் இரத்த வாட்கள்.
புகழ்கின்ற போர்வீரப் புலியே !—நானே,
குவிந்ததொரு நெற்குவியல்—நீரோ, வானக்
கூரைதனை, முடியாலே குத்தும் குன்று.

சுவையுள்ள செங்கரும்பை நசுக்கு தற்குத்
தூண்போன்ற கருவிகளா வேண்டும்? நெல்லின்
குவியலென இருக்கின்ற எனைச ரிக்கக்
குதிரைகளேன் ? உம்இடது காலே போதும் !

உள்ளத்திலே எழுந்த முடிவை, இந்த
ஓலைதனில் தருகின்றேன்; சமுத்தி ரத்து,
வெள்ளத்தின் முன்வாய்க்கால் என்ன செய்யும்?
வேங்கைஎங்கே? ஆடெங்கே? ஓடித் துப் போடும்

சுள்ளிக்கேன் கோடாரி? உமது வேந்தன்
சொற்படிநான் கீழ்ப்படியச் சித்த மானேன்.
பள்ளத்தின் பக்கத்தில் கிடக்கும் கல்நான்.
படைவீரத் தளபதியே, தள்ளி டாதீர் !

வெடிக்கின்ற பீரங்கி வாயை மூட
வேண்டுகிறேன் எசமானே ! இனிமேல் உங்கள்,
அடிமீது முடிவைப்பேன்; வார்த்தை மீறேன்;
ஐயாவே! முடிவாக ஒன்று: என்போல்,

படைவீரர் தமைப்பிரிந்து, ஆவி தன்னைப்
பறிக்கின்ற ஆயுதங்கள் ஏது மின்றிக்,
கொடிப்பாதை வழியாகத் தனியே வந்துக்
குகையிலெனைச் சந்திக்க வேண்டு கின்றேன் !

இப்படிக்கு—சிவாஜி

எங்கள் தமிழ் இருக்க இந்தியிலா வரவேற்புரை?

இதயம்

சென்னை 18—11—55 வெள்ளி

செந்தமிழன் கண்ணில் சுண்ணும்பு தடவாதே!

பலநூறு மொழிகள் நிலவும் இந்திய
தேசத் தின்தே சீய மொழிகள்
பதினுன் சென்று பண்டிதர் ஆட்சி,
ஒப்புக் கொண்டு உள்ளது. அவற்றுள்,
இந்தியோ, உருதோ—இனித்திடும் தமிழோ,
ஒன்றினைக் காட்டிலும் ஒன்று சிறந்தது
என்பது இல்லை, என்ப தாவும்
அரசியல் சட்டம் அறிவித் துள்ளது.

* * *

அரசியல் உறுதி அப்படி இருந்திட —
இச்சென் னைக்கு இருபத் தெட்டிலே,
புல்கா னின்வரப் போகிருர் அல்லவா ?
அவருக் கிங்கே அளித்திட இருக்கும்
வாழ்த்து மடலின் வாசக வரிகள்
இந்தியில் அல்லது இரசிய மொழியில்
மட்டு மேஇருக் கட்டும் என்று,
கட்டாய அறிக்கை விட்டு உள்ளது
இந்தி நுழைக்கும் இந்திய அரசு.
என்ன நியாயம்? எப்படிப் பொருந்தும்?
கோவில் அறிவைக் குழியில் புதைத்திடும்
சோவியத் மார்சலை சுந்தர மனிதனை,
தமிழில் வாழ்த்திஞல் தடுப்பா னேன் இதை ?
இந்தியில் வரவேற் பிருக்கலாம் என்ருல்
இந்திதான் சிறந்தது என்பதா கின்றது!
இந்திய ஆட்சிக் கிந்த நினைப்பு
இல்லாது போனுல் இம்மா நிலத்தில்
வழங்கும் தாய்மொழி வாழ்த்தைத் தடுக்குமா ?
இங்கே வந்திடும் இரசியத் தலைவரை
இருபத் தாறு எழுத்தினு லான,
ஆங்கில மொழியில் அகில இந்தியா
புகழ்ந்துபா ராட்டல் பொருந்தா தென்று
நினைப்பதில் கொஞ்சம் நியாயம் இருக்கலாம் ?
ஆனுல்,
செந்தமிழ் வழங்கும் சென்னை வந்திடும்
மார்சல் மனிதரை, வருக! என்று
அன்புத் தமிழில் அழைப்பதா? அல்லது'
மந்த இந்தியில் 'மார்சல் மணியே'
என்று அழைப்பதா? எதுஇதில் நியாயம்?

* * *

அரசியல் சட்ட அறிவிப் புப்படி
நடந்திடும் எண்ணம் நாடாள் வோர்க்கு
நிச்சம் இருந்தால் இச்சம யத்தில்
தமிழ்வர வேற்பைத் தடுப்பரோ இங்கே ?

திராவிட மாணவர் முன்னேற்ற கழக

2-வது மாநில மாநாடு

19–11–55 சனி காலை 8-30 மணிக்கு
சென்னை, கோகலே மண்டபத்தில்

தலைவர்; கே. ஏ மதியழகன்,
திறப்பாளர்: இரா. நெடுஞ்செழியன்.
பேசுவோர்: சி. என். அண்ணுதுரை; என். வி. நடராசன்.
ஆகியோரும், மற்றும் திராவிட மாணவ மணிகளும்.

நன்கொடை: ரூ- 1, அணு 8.

உ. பில்லப்பன்,
எல். லெனின்,
து. தீ. தயாளன்,
—செயலாளர்கள்

டி. கே. பொன்னுவேலு.
—வரவேற்புக் குழுத் தலைவர்

சொல் விளக்கம் ★

கைதை

சுப்பு ரத்தின தாசன்

உலையிரும்பு போற்சிவந்த மாலை நேரம்;
ஓடத்தைக் கடலோரம் நிறுத்தி விட்டு,
மலையப்பன் விரைவாக நடந்து சென்ருன்,
மத்தளத்தோ ளில்வலையைப் போட்டுக் கொண்டு.
இலைநீண்ட தாழைமரம் அடர்த்தி யாக
இருந்திட்ட மணல்வழியே வந்த போது,
வலைவிழியாள், 'மணிமாலை' குடத்தை ஏந்தி
மணற்கிணற்றில் நீரெடுக்க அங்கே வந்தாள்.

அத்தைமகள் அங்குவரக் கண்டு, அந்த
ஆணழகன், பூரித்தான்! அந்தப் பெண்ணும்,
முத்துப்பல் வரிவெளிச்சம் காட்டி, அன்னேன்
முகத்திற்குக் கண்ணுடி போல நின்ருள்.
'பத்துப்பாட் டே'என்று அவன்தொ டங்கப்,
'பதினெண்கீழ்க் கணக்கே'என் றவள்மு டித்தாள்.
அத்தருணம் வழிப்போக்கன் அங்கே வந்து,
அருந்துதற்கு நீர்கேட்டான், குடித்தான், சென்ருன்.

'உன்தந்தை, நமதுதிரு மணத்தைப் பற்றி,
உரைத்தாரா ஏதேனும்?' என்று, பச்சைத்
தென்னம்பா ளைபோன்று சிரித்து நின்ற
சிங்காரி தனைமுத்தம் இடுவோன் கேட்டான்.
'கொன்றைமலர் வேண்டு'மென வந்து கேட்டால்,
கொடுக்கின்ருர் என்தந்தை; அதனை விட்டு,
என்றைக்கு? எப்போது? என்ன சொன்னுர்?
என்பதெலாம் வீண்கேள்வி அத்தான்' என்ருள்.
'ஆகட்டும் இதுபற்றிக் கவனிக் கின்றேன்,
ஆடிவரும் நீரலையே! அன்பே! எந்தன்
தாகத்தைத் தீராயோ, இரவில் தூங்கும்
தாமரைப்பூ வாயிதழால்' எனநெ ருங்கத்,
தோகைமயில் ஊஹூஹூம் எனந கர்ந்து,
சுந்தரனைத் துடிக்கவைத்துப் பிறகு,—மின்னும்
தேகத்தைக் காதலன்முன் கொண்டு வந்தாள்.
செந்தமிழன், செவ்வுதட்டைக் கொண்டு போனுன்!
வாள்விழியாள் வெடுக்கென்று குடத்தைக் கீழே
வைத்திட்டாள். வைத்தவுடன், மலையைப் போன்ற
தோள்மீது, இருந்திட்ட வலையை, அன்னேன்.
தூக்கிஎறிந் தான்தரையில், உதடு தன்னை,
நாள்விளக்கு மங்கும்வரை, சிவக்க வைத்தார்.
நன்னீரில் நனையாமல் ஈர மானுர்!
'தேள்!' என்று கூச்சலிட்டாள் வேண்டு மென்றே.
திடுக்கிட்டான்; சிரித்தபடி விலகிக் கொண்டாள்.
தண்ணீரைத் தமிழச்சி மொண்டாள்; தையல்
தரைமீது இருந்திட்ட தாழம் பூவை,
வண்ணமலர்க் கண்ணழகன் எடுக்க, வான
வட்டநிலா முகமுடையாள், அவனை நோக்கி;
'வண்டைப்போல் மொய்ப்பவரே! எனக்குத், தாழை
மலர்தன்னைக் 'கைதை'என அழைப்ப தற்கு,
உண்டான காரணத்தை உரைக்க வேண்டும்.
உரைத்தால்தான் மறுபடியும் முத்தம்' என்ருள்.
பெய்தமழை யால்செழிக்கும் பயிரைப் போன்று
பெருங்கல்வி யால்செழிக்கும் பெண்ணே! மக்கள்,
கைதனிலே தைப்பதனுல், தாழம் பூவைக்
"கைதை"என அழைக்கின்ருேம்' என்று ரைத்தான்.
மைதின்னும் மீன்விழியாள், அதனைக் கேட்டு
மாதுளம்பூ உதடுதனைப் பரிசு தந்தாள்.
கொய்தமலர்த் தாழைதனைத் திரும்பத் தந்தான்.
குயில்மங்கை, கோவைஇதழ் அரும்பு தந்தாள்.

புலவனைத் துரத்திய * * * போஜன்

கவிகாளி தாசனுக்கும், போஜ ராஜன்
கைப்பிடித்த மனைவிக்கும் தொடர்புண் டென்ற
அவமானக் கற்பனையைச் சிருட்டித் தார்கள்,
ஆத்தானப் புலவரெலாம். அந்தப் பேச்சைப்
புவியரசன் காதினிலே விழவைத் தார்கள்,
பொய்முத்தம் தருகின்ற பெண்டிர் மூலம்,
'சுவைஉறவா அவனோடு? இதனை, நாளை
சோதிப்போம்' எனவேந்தன் தீர்மா னித்தான்.

நோக்காடு வந்ததுபோல் நடித்தான்; தர்க்க
நூலறிந்த பேரரசன் மறுநாள். 'கல்வி
வாக்கறிந்த கவிகாளி தாசன், இங்கே
வரவேண்டும் இப்போதே' என்றான். கொட்டைப்
பாக்கொன்று கடிக்கின்ற நேரத் திற்குள்,
பாவாணன் பார்த்திபனின் முன்னே நின்றான்.
பூக்காடு போல்சிரிக்கும் அரசி, கத்திப்
போர்வேந்தன் அருகினிலே வந்த மர்ந்தாள்!

பட்டத்து அரசிதனை வேந்தன் பார்த்துப்,
'பத்தினியே! ஏனைவந்து நோய ணுக்கள்
தொட்டதனால் தலைநோவு பெற்றேன்' என்றான்.
தோகையவள் அதைக்கேட்டு வருந்த, தாரா
பட்டினத்துச் சித்திரமே! பசிக்கு' தென்றான்.
பருப்போடு கலந்துள்ள அன்னந் தன்னை,
வட்டித்தாள் கொண்டுவந்து மனைவி, தங்க
மணிவேந்தன் உரையாடிக் கொண்டே உண்டான்.

வந்தங்கே அமர்ந்திருந்த கவிஞ னோடு
வாள்வேந்தன் உரையாடும் போது, ஈரச்
செந்தாம ரைமுகத்து ராணி மாதும்,
சிலபேச்சு இடையிடையே தந்து வந்தாள்.
கொந்தளித்துக் கொண்டிருந்த போஜன், கல்விக்
குரல்மனிதன் பேச்சினிலும், அழகு ராணி
தந்துவந்த வார்த்தையிலும் குற்றங் கண்டு,
சந்தேகத் தைமேலும் வளர்க்க லானான்.

கொடியிடையாள் தனைப்பார்த்தான்; கண்ணால் பேச்சுக்
கொடுக்கின்றா னா,மனைவி இடத்தில் என்று,
முடிசூடா கவியரசன் தன்னைக் கண்ணின்
முனையாலே விட்டுவிட்டு வேந்தன் பார்த்தான்.
நடைமுறையில் எல்லோரும் பார்த்தல் போல,
நங்கையின்மேல் கவிஞன்விழி மொய்த்தல் கண்டு,
'கடிக்கின்றான் இக்கனியை, இல்லா விட்டால்,
கண்ணைஇரு நூறுதரம் பாய்ச்சு வானா?

பாங்கியைப்போல் வேடமிட்டு, அரசி தூங்கும்
படுக்கையறை செல்கின்றான் காளி தாசன்.
தூங்காமல் நீகவனி, விளங்கும் உண்மை.
துரோகஞ்செய் கின்றாரே இரண்டு பேரும்!
நீங்காத களங்கத்தைத் தாங்கு கின்ற
நிலவாகின் றாள்நமது ராணி'—என்ற
தாங்காத அவமானப் பேச்சு யாவும்
சரிதானோ?—இவ்வாறு நினைத்தான் மன்னன்.

புடமிட்டுப் பார்த்திடுவோம் பொன்னை, என்று,
புலிநகத்தைப் போலிருக்கும் சோற்றின் மீது
படுத்துக்கொண் டிருக்கின்ற இந்தப் பச்சைப்
பருப்பின்மூட் டவிழ்ந்ததுஏன்? என்றான். கல்வி
அடைகின்ற நெஞ்சத்தான், 'அன்னம் என்னும்
ஆணோடு புணர்ந்ததனால், இப்ப ருப்பின்
உடையென்னும் மேல்தோல்நீங் கிற்று என்று
உரைத்திட்டான் கவிதையிலே, ஓர்நொ டிக்குள்!

கவியறிவுக் கலப்போடு அவன்அ ளித்தக்
கற்கண்டு பதில்தன்னை அங்கி ருந்தப்,
புவியாளும் மன்னவனின் மனைவி கேட்டுப்
புன்னகையைத் தந்தபடி 'ஆஹா!' என்று
சுவையோடு புகழ்ந்திட்டாள் அதனைக் கேட்டுத்
துடித்திட்டான் தார்வேந்தன். இந்த நாட்டின்
அவமானச் சின்னம்இவள்! இந்தக் கள்வன்
அதற்கெல்லாம் வழிகாட்டும் புதுக்கை காட்டி!

நேற்றிரவு திரைமறைவில் கேட்ட தெல்லாம்
நிச்சயமாய்ப் பழுதில்லை, முற்றும் உண்மை.
ஆற்றுமணல் போன்றவளை நான்இ னிப்பு
அளிக்கின்ற சர்க்கரைஎன் றெண்ணி விட்டேன்.
சேற்றோடு சந்தனமா சேரும்? ஊஹூம்!
சேராது எனநம்பி இருந்தேன்; ஆனால்....,
மாற்றானுக் கும்முத்தம்! எனக்கும் முத்தம்!
மானத்தை இழந்தாளே—எனக்கொ தித்தான்!

படைவைத்து அரசாண்ட போஜ ராஜன்
படிப்படியாய் இவ்வாறு எண்ண மிட்டுப்
'பிடிபட்டீர் துரோகிகளே! நீங்கள் காமப்
பிழைபுரிந்தீர்? அதற்குஇதோ' என்று வாளை
எடுத்திட்டான் வெட்டுதற்கு. கவியை நோக்கி,
இப்போதே எடுஓட்டம் நாட்டை விட்டு!
கொடுத்திட்டேன் உயிர்ப்பிச்சை உனக்கு' என்றான்.
குனிந்தபடி பேசாமல் கவிஞன் சென்றான்!

இசைப்பாடல் — 8.

அகிலம் யாவும் அழகின் வேலை

எடுப்பு

அகிலம் யாவும் அழகின் வேலை—நீல
ஆகாயம், செங்கதிர் செல்லும் சாலை (அகிலம்)

மேல் எடுப்பு

பகலும் இரவும், இருளும் நிழலும்—அறுவகைப்
பருவமும் உருண்டை உருவமும் உடைய, இந்த (அகிலம்)

அமைதி

கருங்கடலின் அலையும்; வெண்ணிலவின் தலையும்;
கண்கவரும் சிலையும்; பொன்வளரும் மலையும்;
அருவியின் ஓட்டமும்; பறவையின் கூட்டமும்,
ஆற்றின் நீட்டமும்; தேன்மலர்த் தோட்டமும்
அமைந்த (அகிலம்)

காதலும், வீரமும்; இன்பமும், எழுச்சியும்;
கண்ணீரும், சிரிப்பும்; ஆடலும் பாடலும்;
வாதமும், வெற்றியும், தோல்வியும், அடிக்கடி
மாறும் முடிவும் மற்றவையும் கலந்த (அகிலம்)



அரங்கேற்றம்!

இயற்கையெழில்

மூத்தமிழ் முழங்கும் இத்தமிழ் நாட்டில்
ஓங்கி உயர்ந்த மலைவளம் தன்னில்
சீர்மிகு எழிலுடன் சிறக்க வீழ்ந்திடும்
அருவியின் ஓசை இனிதாய் இருக்கும்
ஆற்றின் கரையில் ஓங்கி உயர்ந்த
மாவின் பழங்கள் ஆற்றில் விழுந்திட
அதனைகண்ட அழகிய மீன்கள்
இனிதாய்க் கொத்தி இயைந்து தின்றிட
மேலே பறந்த பறவை யென்று
இலங்கி நீரில் இனிது ஆடிய
அழகிய மீன்களைப் பற்றிப் பறந்தது
பறந்து சென்று பலாஅ மரத்தில்
பற்றிய மீனைப் பாங்குடன் வைத்தது.
கிளையில் தொங்கிய குரங்கு ஒன்று
அழகிதாய் அதனைக் கூர்ந்து நோக்கி
அழகிய மீனைப் பற்ற நினைத்து
அருவியில் அழகாய் வீழ்ந்தது குரங்கு
இதனைப் பார்த்த யானும் எனது
அருமைத் தங்கை அருண் மொழியாளும்
மகிழ்ச்சிக் கடலில் தாவிக் குதித்தோம்
ஆற்றில் குரங்கு பாய்ந்தது போன்றே.

—முத்துசாமி,
வடக்கிருப்பு-அண்ணாமலைநகர்.

★

வெறுங் கனவு

பொங்குதிரை கடலொத்த கூட்டம் ஒன்று
போனதுஎன் தெருவழியே, காணச் சென்றேன்.
எங்குமொலி வாழ்த்துக்கள் சத்தம் மீறி
இனிமைமிகு வாத்தியங்கள் முழங்கக் கேட்டேன்.
'எங்களுடைய யூருக்குக் கல்விச்சாலை
ஏற்படுத்திக் கொடுத்தவரைப் புகழுங் கூட்டம்
அங்கிருந்து இங்குவரை' என்றார் நண்பர்!
அளவில்லை நான்கொண்ட மகிழ்ச்சிக் கெல்லாம்!

கோயிலொன்று கட்டிஅதன் கும்பத் திற்கு
குளிர்நீரும் பசும்பாலும் ஊற்றச் செய்து
வாயாரப் பிறர்புகழ மகிழும் தன்மை
வழிவழியாய் வந்ததுபோய் பள்ளிக் கூடம்,
நோயற்ற வாழ்விற்கும் உடலிற் சேர்ந்த
நோய்தீர்த்துக் காப்பாற்றும் நிலையங் கட்டி
தாயைப்போல் ஏழைக்குத் தர்மம் செய்யும்
தாராள மனமுடையோர் கண்டேன்! கண்டேன்

காதடைக்கும் சத்தத்தால் கண்வி ழித்துக்
காட்சியதை நோக்குங்கால் வியப்பா லெந்தன்
பாதமந்த கூட்டத்தை நோக்கிச் செல்ல
பதைத்திட்டேன்; கண்டதெலாங் கனவோ ஆமாம்!
காதல்மிகும் பத்தினியாள் உமையா ளோடு
காட்சிகொடுத் தருள்புரிய, ஒளிருந் தங்க
வாகனத்தில் சிவனார்தான் வீற்றிருந் தார்!
மனக்கனவு கண்டதற்கு வெட்கிப் போனேன்!

—இராதா இடையர் வீதி, கோவை.

★

இராவணன் தூய திராவிடன்

அறநெறி பிறழ்ந்திடா மறத்தமிழ்க் குலத்தினன்
செறிந்தநல் அறிவால் சிறப்புடன் திகழுநற்
பலகலைக் கடலைப் பயனுற ஆய்ந்தே
இலையினி பயில்வதற் கெனச்சொலு மாறு
கற்றநம் முன்னவன் கனிதமிழ் பாடுங்
கொற்றவன் புறங்கொடா வெற்றிகொள் மரபன்
இராவணம் உடையவன் தராதரம் உணர்ந்தவன்
திராவிடப் பெருந்தகை இராவணன், தனித்தமிழ்
மன்னவன் இலையென மறுப்போர்
இன்தமிழ் அறிஞரோ! இயம்புக இனிதே!

—இரா. சண்முகம், பண்ணைக்காடு.

பூஇருக்கப் புட்பம் ஏன் ?

அருமை நந்தமிழ் அழியவும் அழகிலா
எருமைச் சமசு கிருதம் இலங்கவும்
எண்ணி அதற்குக் கூட்டிக் கொடுக்கவும்
பின்வாங் கிடாத போலியர், மலையின்
சாலையில் இருந்து வெளிப்படுத் திடும்
ஏலாப் பேருடை நாளின் ஏட்டிலும்
கிழமை இதழிலும் திரு, திரு மதிஎன்றும்
எழுதாமல் இன்னும் இருப்பத னோடும்,
அழகிலாப் புதுப்புது ஆரியச் சொற்களை
நுழைய விட்டும் வருகின் றார்கள்.
நமக்குளே சிலரும்' ''ஆரியச் சொற்கள்
தமிழிற் கலப்பதால் கேடிலை'' என்று
பேசுவர்; எழுதுவர்! தூசிநிகர் பொக்கிகள்!
ஐயகோ! ஐயகோ! அதனால் தமிழன்
தூயசெஞ் சொற்கள் வழக்கொழிந்(து), ஆரியக்
கடமுடாச் சொற்களே வழக்கிலே தங்கும்!
விடமது நமக்கேன்! நஞ்சே போதும்!

புட்பம் நமக்கேன்! பூவே போதும்!
நட்டம் கட்டம் குட்டம் இட்டம்ஏன்!
இழவு துன்பம் தொழுநோய் விருப்பம்
தோடம் வேண்டாம்! தீட்டே போதும்!
வேடம் வேண்டாம்! கோலமே போதும்!
ஐ, ஷ, ஸ்ரீ, ஸ, க்ஷ, ஹ, ஆகிய ஆரிய
எழுத்துக் களையே தொடாதீர்! தொடாதீர்!
எழுதுமின் ஜேம்ஸை சேமுசு என்றே!
ஸ்டாலின் தமிழில் தாலின் ஆகும்!

நெடுஞ்செழி யனாரை நோக்கிப் பழகுமின்!
அவர் தமிழ்க் கு) ஏற்ப எழுதல்பின் பற்றுமின்!
தவறாது பாரதி தாசர் பின் பற்றுமின்!
இவையறிந்து நடக்க இறைஞ்சுகின்றேனே!

—கோ. திருமால், சென்னை-1.

★

தமிழன்

கல்வியில் வல்லவன் தமிழன்-உயர்
காவியம் செய்தவன் தமிழன்
வல்லமை பெற்றவன் தமிழன்-உலக
வளர்ச்சியை நினைப்பவன் தமிழன்.
வீரத்திற் சிறந்தவன் தமிழன்-போர்
வெற்றியில் உயர்ந்தவன் தமிழன்
சாரத்தைத் தந்தவன் தமிழன்-மொழிச்
சங்கம் வளர்த்தவன் தமிழன்!
சாதி மதம் அற்றோன் தமிழன் தெய்வச்
சண்டையிடாதவன் தமிழன்
நீதியைக் காத்தவன் தமிழன் என்றும்
நெறிதவ றாதவன் தமிழன்.

—பழையனூரான்.

★

"குழலோசை"

தென்றலி ளங்குழவி மலரின்
தென்மணம் ஏய்ந்திவர
அன்றிலுடன் பேடு-கூடும்
ஆனந்த சோலையிலே,
முல்லைக்கொடி பின்னந்து-கட்டி
முறுக்கிய ஊசலிலே
முல்லை முறுவலுடன்-பொன்னி
மோகனம் பாடலுற்றாள்.
கோடைத் தென்றலிலே-பாட்டின்
வண்ணம் மிதந்து வந்து
ஓடையில் நீர்குடித்த-பொன்னன்
உள்ளங் களிப்படைய
காதில் நுழைந்தூற-இசையின்
கருத்தமிழ்ந்து நின்றான்.
ஊதுகுழ லெடுத்தான்-பொன்னன்
ஓசை சுவையறிந்து
கொன்றைக் குழலூத-பொன்னி
குரலும் கூடியது.
கொன்றைக் குடிலோசை-உள்ளம்
கொள்ளை கொண்டு பரவ
நின்றது முல்லைக்கொடி-ஊசல்
நினைவும மாறியது.
பாட்டை நிறுத்திவிட்டாள்-பொன்னி
பாடும் குழலோசை
கேட்ட வழிநோக்கி-மனம்
கேட்காம லோடியது.

—டி. வி. இசையரசு, வளவனூர்-

நமது மேடை

14-11-55 சென்னையில்
ஐ நா. சிறுவர் தினம்

திருவா ளர்எம். கே. பதி அவர்கள்
தலைமையி லே,திரு பால கோபால்
பீ, ஏ. பீ. எல். அவர்களும்; மற்றும்
இராமச் சந்திரன், எஸ். எஸ். இராசன்,
அனைவரும், சூளை ஐ, நா, சிறுவர்
தினத்தைக் குறித்துச் சிறக்கப் பேசினர்
சிறுமியர் நடனத் திருவிழா செய்தனர்
சுயமரி யாதைச் சூளை-நகர
இளைஞர்க் கழகம் இதைநடத் திற்றே!

●

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

நவ. 17 பவானி
18 மாலை: கிண்டி பொறியியல் கல்லூரி
19 காலை: கோகலே மண்டபம், சென்னை.
20 மாலை: சென்னை 16-வது வட்டம்.

இந்த ஊர்களில் இரா.நெடுஞ் செழியன்
சிந்தனை வளர்ச்சி தந்திடும்
வாய்ச்சொல் தருவார் பேச்சுத் தமிழிலே!

●

20-11-55 சேலத்தில்!

அன்புக் கரசு அவர்கள் தலைமையில்
அறிஞர் அண்ணா அவர்கள் கழகக்
கட்டிடம் தன்னைக் காலைஎட்டு மணிக்குத்
திறப்பார் பேசுவார் இறப்பிலாத் தமிழிலே

●

23-11-55 ஆனையாம் பட்டியில்

ஆனையாம் பட்டியில் அறிஞர் அண்ணா!
மேடை ஏறி முதிர்ந்த நினைவுகள்
மக்கட் கெல்லாம் வழங்கிய பின்னர்
ஆத்தூர் வருவார் அங்கே வந்து,
நமது கே. ஆர். ஆர். நடத்தும்நா டகத்தில்
தலைமை தாங்கி மலைத்தேன் சுவையொடு
புதிய வாய்ச்சொல் பதியவைப் பாரே!

●

27-11-55 புதுவையில்:

பாரதி தாசன் பிறந்த புதுவையில்,
அண்ணா நெடுஞ்செழி யன், இரு வர்க்கும்
கழகத் தின்குழு கதிர் துயில் மாலையில்
வரவேற் பளிக்கும் வாழ்த்துக் குரலிலே

வெளிவந்துவிட்டது!

திராவிடர் நாட்குறிப்பு

(டயரி 1956)

இந்த டயரியில், தி. மு. க. முழுவிவரங்கள், சட்டதிட்டங்கள், பேச்சாளர் முகவரிகள், 1100 தி. மு. க. கிளைகளின் பட்டியல்; அஞ்சல் பத்திரப்பதிவு கட்டணங்கள், விற்பனை வரி வருமான வரி விவரங்கள் உள்ளன.

பக்கந்தோறும் உலக அறிஞர்களின் புதிய பொன்மொழிகள்.

அழகிய முழு காலிகோ பைண்டு 500 பக்கம் ரூ. 1 செலவு தனி விற்பனையாளர் கழிவு 20 வீதம்.

ஒரு டயரி வேண்டுவோர், ரூ. 1-3-0 அனுப்புக.

குறிப்பு:—தி. மு. க. தலைவர்களின் பெரிய படங்கள், பொங்கல் வாழ்த்துகள் கிடைக்கும்.

— போர்வாள் —

பவழக்காரத் தெரு, சென்னை-1.

ஆசிரியரும், வெளியிடுபவரும்:—சுரதா, 12, படவேட்டம்மன் கோவில் தெரு, சென்னை-12. அச்சிட்டவர்:—D. ரத்தினவேலு, ஸ்ரீ பாரதி ரஸ், 19, ஆலத்தூர் சுப்பிரமணிய ஆச்சாரி தெரு, சூளை, சென்னை-1
[ஆண்டு சந்தா ரூ. 4. ஆறு மாதம் ரூ. 2.]